**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**CC .No. 18 /2023**

Deposition of Witness : LW5 /PW2

| | | | |
|---|---|---|---|
| Name | ரவி | Taluk | |
| Father's Name | பழனியப்பன் | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 17 .03.2026.** | | | |

**எதிரி ஆஜர்.**

1) நான் அல்லாலி கவுண்டனூரில் குடியிருந்து டைலராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 02.01.2022 ம்தேதி காலை 7 மணி அளவில் நானும், எனது நண்பர் கார்த்திக்பாபு என்பவரும் வழக்கமாக பூங்கா நகரில் டீக்கடைக்கு சென்று, டீ குடித்து கொண்டிருந்தபோது தாந்தோணிமலை போலிசார் அங்கு வந்து சம்பவ இடமான பூங்கா நகர் லட்சுமி குடோன் அருகில் நடந்த சம்பவம் குறித்து என் முன்னிலையிலும், எனது நண்பர் கார்த்திக்பாபு என்பவர் முன்னிலையிலும் சம்பவ இடத்தை பார்த்து வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகஜரில் சாட்சியாக நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/–T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**CC .No. 18 /2023**

Deposition of Witness : LW1 /PW1

| | | | |
|---|---|---|---|
| Name | லட்சுமி | Taluk | |
| Husband Name | தங்கவேல் | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 17 .03.2026.** | | | |

**எதிரி ஆஜர்.**

1) நான் தாந்தோணிமலையில் குடியிருந்து தேங்காய் குடோன் வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 30.12.2021ந்தேதி இரவு 10 மணி அளவில் தேங்காய் குடோனில் அருகிலேயே பெட்டி கடை இருந்தது. அந்த பெட்டி கடைக்கு சில நபர்கள் மது அருந்துவார்கள். கடையை கூட்டிவிட்டு அதை மூடுவதற்காக நான் சென்றபோது , அங்கு வந்த ஆஜர் எதிரி என்னிடம் ஏன் குடிப்பதற்காக அனுமதிக்கிறிர்கள் என்று என்னை கேட்டு கொண்டு, கெட்ட வார்த்தையால் என்னை, நீ நடிக்காதடி புண்டமவளே என்று பேசி கொண்டிருக்கும்போதே என்னை ஓங்கி அடித்தார், எனது வலதுகை ஆள்காட்டி விரலை பிடித்து முறுக்கினார். அதனால் எனது ஆள்காட்டி விரல் வளைந்து விட்டது. அப்போது எனது மருமகள் சிவகாமி அங்குவந்து சண்டையை விலக்கிவிட்டார்கள். நான் வலி தாங்க முடியாமல் அங்கேயே படுத்துவிட்டேன்.

2) பின்பு வலி தாங்க முடியாமல் நான் 31.12.2021ம்தேதி க்ரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தேன். போலிசார் என்னை

Sd/−T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
கரூர்.

விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கைரேகை என்னுடையதுதான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/–T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
கரூர்.